# ஏர்க்களம்

ஏப்ரல் - ஜுன் 2018



ஏப்ரல் - ஜுன் 2018
சிறப்பு ஆசிரியர்
முனைவர். ஹெ. பிலிப்
விரிவாக்க கல்வி இயக்குனர்

ஆசிரியர்
முனைவர். சு.கண்ணன்
திட்ட ஒருங்கிணைப்பாளர்

இணை ஆசிரியர்
முனைவர். க. வேங்கட லெட்சுமி
உதவி பேராசிரியர் (உழவியல்)

ஆசிரியர் குழு
முனைவர் அ. ரமேஷ் குமார்
முனைவர். க.நடராஜன்
திருமதி. கு. பொற்கொடி
முனைவர் சு. மருதாச்சலம்

தொழில்நுட்ப உதவி குழு
திருமதி. க. மீனலட்சுமி
திரு. த. குமார்
திருமதி. மெ. செல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
**வேளாண்மை அறிவியல் நிலையம்**
விருத்தாசலம் - கடலூர் மாவட்டம்

## அன்பார்ந்த விவசாயிகளே,

நமது அரசாங்கத்தின் குறிக்கோளான விவசாயத்தில் உற்பத்தியை இருமடங்காக பெருக்கி வருமானத்தை மும்மடங்காக உயர்த்த வேண்டும் என்ற இலட்சியத்துடன் நமது வேளாண் அறிவியல் நிலையம் விருத்தாசலம் மிகவும் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. இது தொடர்பாக பல வயல்வெளி ஆய்வுகள், முதல் நிலை செயல்விளக்கத்திடல்கள், நிலையப்பயிற்சி மற்றும் களப்பயிற்சிகளை இக்காலண்டில் நடத்தி வருகின்றோம். இந்த ஏர்களம் செய்தி மடலில் ஏப்ரல் - ஜீன் 2018க்கான நமது நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து சுருக்கமாக கூறியுள்ளோம். விவசாயிகள் தங்கள் வாழ்வாதரத்தை உயர்த்திக்கொள்ள இவ் வேளாண்மை அறிவியல் நிலையத்தை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.



## தர்பூசணியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை உத்திகள் பற்றிய செயல்விளக்கம்

கடலூர் மாவட்டம், ஸ்ரீ முஷ்ணம் வட்டாரத்தில் எட்டு விவசாயிகளின் வயல்களில் தர்பூசணி பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை உத்திகள் குறித்த முதல்நிலை செயல்விளக்கம் நடத்தப்பட்டது. பயிர் மேலாண்மை உத்திகளான, சூடோமோனாஸ் புளோரசன்ஸ் 10 கிராம், விதை என்றளவில் விதை நேர்த்தி மற்றும் இயற்கை இடுபொருட்களான டிரைக்கோடெர்மா விரிடி (2.5 கிலோ/எக்டர்), அசோஸ்பைரில்லம் (2.5 கிலோ/எக்டர்), பாஸ்போபாக்டீரியா(2.5 கிலோ/எக்டர்), போன்றவை மட்கிய தொழுஉரத்துடன் கலந்து அடியுரமாக இடப்பட்டன. மேலும், பெண்பூக்களின் உற்பத்தியை அதிகப்படுத்த எத்ரல்என்ற பயிர் வளர்ச்சி ஊக்கியை (1மிலி / 10 லிட்டர் தண்ணீர்) விதைத்த 15 நாள் முதல் 10 நாட்கள் இடைவெளியில் 4 முறை தெளிப்பது குறித்த செயல்விளக்கம் மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக, செயல்விளக்கம் மேற்கொள்ளப்பட்ட வயல்களில் 33.4 டன்கள்/எக்டர் மகசூல் பெறப்பட்டது. இது விவசாயியின் நடைமுறையை விட சதவீதம் அதிகமாகும். மேலும், செயல்விளக்க திடல்களில் பெறப்பட்ட காய்களின் எண்ணிக்கை (2.34), காய்களின் எடை(5.75 கிலோ) ஆகியவை விவசாயியின் நடைமுறையை விட அதிகரித்திருந்தது. மேலும் செயல்விளக்கத்திடல்களில் மொத்த வருமானம் ரூ.207200/எக்டர் ஆகவும் விவசாயியின் நடைமுறையில் ரூ.261356/எக்டர் ஆகவும் இருந்தது. இந்த செயல் விளக்கத்திடல்களை தோட்டக்கலை விஞ்ஞானி முனைவர் அ. இரமேஷ்குமார் நடத்தினார்.



## வாழையில் வயல் ஆய்வு

விருத்தாசல வட்டம் எருமனூர் கிராமத்தில் வாழை சாகுபடி செய்யப்பட்டு அதிக அளவிலான களைக்கொல்லியினை பயன்படுத்தியதனால் ஏற்பட்ட பாதிப்பினை வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் முனைவர் க.வேங்கடலெட்சுமி, முனைவர் அ. இரமேஷ்குமார் அவர்கள் 19.04.2016 அன்று பார்வையிட்டு விவசாயிக்கு ஆலோசனை வழங்கினார்கள்.



## கிஸான் கல்யாண் காரிசாலா நிகழ்ச்சி

வேளாண் அறிவியல் நிலையம், விருத்தாசலம் வேளாண்மை துறையின் அம்மா திட்டத்துடன் 02.05.2018 ல் கிஸான் கல்யாண் காரிசாலா என்ற நிகழ்ச்சியை விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக உயர்த்துவதற்காக கடலூர் மாவட்டத்தில் எல்லா வட்டத்திலும் நடத்தப்பெற்றது. இந்நிகழ்ச்சி கடலூர், நல்லூர், விருத்தாசலம் மற்றும் காட்டுமன்னார் கோவில் வட்டாரத்தில் நடத்தப்பெற்றது. இந்நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர், தொழில் நுட்ப வல்லுனர்கள் உழவியல், விதையியல், நோயியல் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினார்கள். காட்டு மன்னார் கோவில் வட்டாரத்தில் இராஜேந்திரப்பட்டினம் கிராமத்தில் நடத்தப்பெற்ற நிகழ்சசியில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (பொறுப்பு), துணை இயக்குனர் (உரத் தர நிர்ணயம்), துணை இயக்குநர்(வணிகம்), துணை இயக்குநர்(மாநில மற்றும் மத்திய திட்டங்கள்) வேளாண் துணை இயக்குநர்(காட்டு மன்னார் கோவில்) கால்நடைத்துறை இயக்குனர் மற்றும் வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுனர் க.வேங்கடலட்சுமி அவர்கள் கலந்து கொண்டு செம்மை நெல் சாகுபடி குறித்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் காட்டு மன்னார் கோவில் சட்டமன்ற உறுப்பினர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் 131 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு பயடைந்தனர்.



## முந்திரியில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பப்பயிற்சி

மத்திய அரசின் முந்திரி மற்றும் கோகோ அபிவிருத்தி இயக்குநரகம், கொச்சி, கேரளாவின் நிதி உதவியுடன் "முந்திரியில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள்" குறித்த மூன்று நாட்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை, இத்திட்டத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் அ. இரமேஷ்குமார், உதவிப்பேராசிரியர் (தோட்டக்கலை) அவர்கள் பண்ருட்டி வட்டாரத்தைச் சேர்ந்த வீரசிங்கன்குப்பம் என்ற கிராமத்தில் நடத்தினார். இப்பயிற்சிக்கு வேளாண்மை அறிவியல் நிலையத்தின் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சு.கண்ணன் தலைமை தாங்கினார். இப்பயிற்சியில் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களான உயர்விளைச்சல் இரகங்கள், தரமான ஒட்டுச்செடி தேர்வு, அடர் நடவு முறை, கவாத்து, இலைவழி ஊட்டச்த்து மேலாண்மை, ஊடுபயிர் மற்றும் சொட்டுநீர்ப்பாசனம் குறித்து முனைவர் அ. இரமேஷ்குமார் எடுத்துரைத்தார். மேலும், முந்திரியைத் தாக்கும் பூச்சி, நோய்கள் மற்றும் அதன் மேலாண்மை குறித்து முனைவர் பி.டி.சரவணன் எடுத்துரைத்தார். முந்திரிப்பழங்களில் மதிப்புக்கூட்டுதல் குறித்து முனைவர் சு.கண்ணன் செயல்விளக்கமளித்தார். மேலும், பண்ருட்டி பகுதியிலுள்ள ஸ்ரீ கோகுல் முந்திரி பருப்பு தொழிற்சாலைக்கு விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். இப்பயிற்சியில் 50 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

